1981 ஏப்ரல் 15] [திரு. தி. அன்பழகன்]

வட ஆற்காடு மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பது திருப்பத்தூர் பகுதியாகும். அந்தப் பகுதியிலே புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். ஒரு தொழிற்கூடம் அந்தப் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த திருப்பத்தூர் பகுதியிலேயும் மற்றும் வடாற்காடு மாவட்டம் முழுமையும், ஆண்டொன்றுக்கு 60,000 டன்கள் மாம்பழம் உற்பத்தியாகின்றது. அதேபோல அந்தப் பகுதியிலே திராட்சையும் உற்பத்தியாகின்றது. தக்காளி போன்ற பழவகைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு பழரச தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வாணியம்பாடி தாலூகாவிலே மரிமானகுப்பம் பகுதியில் ஈயம் கிடைக்கிறதாவென சில வருடங்களுக்கு முன்பாக ஆராய்ச்சி செய்தார்கள். அந்தப் பகுதியிலே அந்தப் பொருள் இருப்பதாகத் தெரிந்தால், அந்த சாத்தியக் கூறுகள் இருந்தால் அவைகளை வெட்டி எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழில் மானியக் கோரிக்கையில் எந்தவிதமான கருத்துக்களும், அரசினுடைய கொள்கைகளும் இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இந்த அரசினுடைய பல அருமையான திட்டங்களும், செயல்முறைகளும் இங்கே சிறப்பாக விளக்கப்பட்டிருக்கிறது என்று கூறி இந்தத் தொழில் மானியக் கோரிக்கையை வரவேற்று பாராட்டி விடைபெறுகிறேன்.

7. அறிவிப்பு.

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன:—

இன்று எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள்—24-தொழில்கள் மற்றும் 49-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான விவாதம் நாளையும் தொடரும்.

நாளை (16—4—1981) அன்று தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடந்தவுடன் மானியக் கோரிக்கைகள் 26-கைத்தறியும் நெசவுத்

தொழிலும், 27-கதர்த் தொழில், 37-பொதுப்பணிகள், கட்டிடங்கள், 38-பொதுப்பணிகள், பணியாளர் அமைப்பும், கருவிகளும் தளவாடங்களும் மற்றும் 51-பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவை எடுத்துக் கொள்ளப் பெறும். நாளையதினம் பேரவை மாலையிலும் 4 மணி முதல் கூடும்.

24—4—1981 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் 31-பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும் 44-எழுதுபொருள் அச்சுத் துறை ஆகியவை 22—4—1981 புதன்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

மானியக் கோரிக்கை எண். 17-கல்வி, 23—4—1981 (வியாழக்கிழமை) மற்றும் 24—4—1981 (வெள்ளிக்கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப்பெறும்.

ஏனைய அலுவல்கள் குறித்து ஏற்கனவே அறிவித்ததில் மாறுதல் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (16—4—1981) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

133. கோரிக்கை எண். 30.—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு—1981–82 (தமிழ், ஆங்கிலம்).

134. சமூக நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1981–82 (ஆங்கிலம்).

135. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு, 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

136. தொழில் கொள்கையும், திட்டங்களும், 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

137. 1981–82 ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

138. 1981–82 ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).